පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290

ආයතනයේ නම - රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : பதிவாளர் நாயகத் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Series No : 290**

**Name of the Institution – Registrar Generals' Department**

**Submission of the Observations of Hon.Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order 119(4).**

**இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் 119(4) தொடர்பில் அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் (முதலாவது பகுதி)**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290**

**நிறுவனத்தின் பெயர் : பதிவாளர் நாயகத் திணைக்களம்**

| | **அரச கணக்குகள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்** | **தற்போதைய முன்னேற்றம்** |
|---|---|---|---|
| 1 | நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்படவில்லை. | திணைக்களத்தின் அனைத்து நிலையான சொத்துக்களையும் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் அதனை இற்றைப்படுத்தி பேணுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தற்போது இற்றைப்படுத்தப்பட்டுள்ளது |
| 2 | நட்டங்கள் பற்றிய பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை. | நட்டங்கள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நட்டங்கள் பற்றிய பதிவேடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 3 | 2004.05.11 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல 171/2004 இன் பிரகாரம் அரசாங்க சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருள் தொடர்பான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் ஏற்புடைய கடவுச்சொற்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றுவதற்கு உரிய பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தற்போது ஏற்புடைய கடவுச் சொற்கள் மாற்றப்பட்டுள்ளதோடு சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருளுக்கு ஏற்புடைய முதலாவது மற்றும் இரண்டாவது கடவுச்சொல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 4 | ஆண்டு கொள்முதல் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | ஆண்டு கொள்முதல் திட்டத்தை உரிய முறையில் தயாரிக்குமாறு ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | ஆண்டு கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அந்த மாதிரிப் படிவம் சரியானதல்ல. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் உரிய மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 5 | கண்காய்வாளர் அதிபதியால் எழுப்பப்பட்ட அனைத்து ஐய வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஏற்புடைய பிரிவுகளில் இருந்து உடனடியாக தகவல்களைப் பெற்று கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முடியுமான அளவு தாமதம் இன்றி பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 6 | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதவிநிலை உத்தியோகத்தர் கூட்டங்கள், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களின் போதும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் போதும் உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்களை உரிய காலப்பகுதிக்குள் வழங்குமாறு பிரதான அலுவலகம் உட்பட உப அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய திகதியில் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 7 | 2017.06.26 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 1/2017 இன் 7 பந்தியின் படி, 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் பற்றிய தகவல்கள்கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தற்போது இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 8 | வருடாந்த பொருள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறைபாடுகள் பற்றிய பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் உரிய காலத்திற்குள் செயல்படுத்தப்படவில்லை. | வருடாந்த பொருள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறைபாடுகள் பற்றிய பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைளை உரிய காலத்திற்குள் செயல்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தற்போது உரிய காலப் பிரிவிற்குள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 9 | ஒரு வாகனம் பாவனைக்கு உதவாது ஒதுக்கப்பட்டு 08 மாதங்களுக்கும் குறைவான காலப் பகுதியில் அகற்றப்படவில்லை. | அகற்றல் நடவடிக்கைகளுக்கு தேவையான விடயங்களை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் ஏற்புடைய வாகனங்களின் செசி இலக்கங்கள் அழிவடைந்து காணப்படுவதால் அது தொதடர்பில் கொம்ட்ரோலர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் மூலம் பரிசோதிக்கப்பட்டது. ஏற்புடைய அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| 10 | அரச வாகன விபத்துகள் குறித்து நி.ஒ.103, 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விபத்துக்குள்ளான வாகனங்கள் குறித்து துரிதமாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | விபத்துக்கு உள்ளான வாகனங்கள் தொடர்பில் தற்போது நி.ஒ. 103 மற்றும் 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| 11 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30, இன் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு சரிபார்க்கப்படவில்லை. | வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பான நடவடிக்கைகளை துரிதமான நிறைவுசெய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தலைமைச் செயலக வாகனங்களில் எரிபொருள் சோதனை முடிந்து, மண்டல அலுவலகங்களின் வாகனங்கள் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றன. |
| 12 | வங்கி கணக்கிணக்க கூற்றுக்களினால் வெளிப்படுத்தப்பட்ட சரி செய்யப்பட வேண்டிய நிலுவைகள் நி.ஒ. பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படவில்லை. | பதிவாளர் நாயகத்தின் கணக்கிற்கு வருமானம் சேர்க்கப்படுவதனால் சிக்கல் தன்மை தோன்றியுள்ளது. வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் குறிப்புகளை ஒரு மாதத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வங்கிக் கணக்கின் சிக்கல் தன்மை காரணமாக வழங்கப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகள் தொரப்பில் நி.ஒ. பிரகாரம் நடவடிக்கை எடுக்கமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | இணக்கப்படுத்த வேண்டிய மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 13 | நி.ஒ. 94(1) பிரகாரம் செலவின விடயத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பிறகு, மீதமுள்ள ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி அதிகமாகச் பொறுப்புக்கள் ஏற்கப்பட்ட்டிருந்தன. | நி.ஒ. 94(1) பிரகாரம் எல்லா சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுக்குமாறும் திணைக்களத்தின் கீழ் பல அலுவலகங்கள் காணப்படுவதனால் தேவையான சந்தர்ப்பத்தில் மாத்திரம் நி.ஒ. 94(2) பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் அத்தியவசிய கடமைகளுக்காக நி.ஒ. 66 மூலம் நிதி ஒதுக்கீடுகளை மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு அதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 14 | ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் நிலுவைகள் காணப்பட்டன. | மாதாந்த கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதன் முன்னேற்றத்தை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்தக் கடன் தொகையை அறவிடுவதற்கு இயலாத போது அதனை வெட்டி விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| 15 | பொது வைப்புக் கணக்கில் உள்ள காலதாமதமான வைப்புக்கள் குறித்து, நி.ஒ.571 இன் பிரகாரம் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பொது வைப்புக் கணக்கில் உள்ள காலதாமதமான வைப்புக்கள் குறித்து, நி.ஒ.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பொது வைப்புக் கணக்கில் காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் 2023 ஆம் ஆண்டு நி.ஒ. 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 16 | நி.ஒ.371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த கட்டுநிதியின் பணிகள் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்வு செய்யப்படவில்லை. | திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் உப கட்டுநிதி வழங்கப்படுவதோடு அந்தப் பணிகள் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்வு செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து ஏற்புடைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| 17 | அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்துமூலமாக பணிகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. | அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்துமூலமாக பணிகளை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்து மூலம் கடமைகளை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

## இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் 119(4) தொடர்பில் அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் (இரண்டாவது பகுதி)

| | அரச கணக்குகள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | பொதுமக்கள் கோரும் தகவல்களை வழங்குதல்/ வழங்காமை பற்றிய விவரங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படவில்லை. | இந்தப் பதிவேட்டை உரிய முறையில் பேணுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | ஏற்புடைய பதிவேடு பேணப்படுகின்றது. |
| 2 | கோரப்பட்ட தகவல்களை வழங்காதது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை ஆவணப்படுத்துவதற்கும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கும் ஆவணங்கள் எதுவும் பேணப்படவில்லை. | இந்தப் பதிவேட்டை உரிய முறையில் பேணுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | ஏற்புடைய பதிவேடு பேணப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| 3 | நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளம் ஊடாக பொதுமக்களின் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்வதற்கு சர்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. | இதற்குத் தேவையான தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்களின் முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை பதிவு செய்வதற்கு சர்தர்ப்பம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | இணையத்தளத்தின் ஊடாக பொதுமக்களுக்கு விசாரணைகள், முறைப்பாடுகள், யோசனைகள் மற்றும் பாராட்டுக்களை சமர்ப்பிப்பதற்குப் பொருத்தமான தொழில்நுட்ப நடவடிக்கை இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பொதுமக்களின் விசாரணைகள், முறைப்பாடுகள், யோசனைகள் மற்றும் பாராட்டுக்களை சமர்ப்பிப்பதற்கான இணைப்பு (Inquire, Complaints & Suggestions form) உள்ளடதோடு அதன் மூலம் மின்னஞ்சல் ஊடாக பொதுமக்கள் முறைப்பாடுக்ள கிடைக்கப்பெறுகின்றன. மும்மொழியிலும் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. |
| 4 | 2018 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | மனித வளத் திட்டத்தை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு 2021 ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்டுள்ளதோடு 2022 ஆம் ஆண்டுக்கான மனிதவளத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. ஆயினும் 2023 ஆம் ஆண்டில் மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 5 | தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தின் மூலம் 50 சதவீதத்திற்கும் மேலான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தது 12 மணிநேர பயிற்சி வாய்ப்பை உத்தரவாதப்படுத்தவில்லை. | வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினை காரணமாக, பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின்படி சேவைத் தேவையின் அடிப்படையில் அடிப்படை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக அதிகாரிகள் நடமாடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் ஒவ்வொரு மாகாணத்தையும் உள்ளடக்கிய சேவைத் தேவையை கருத்திற்கொண்டு பயிற்சி நடத்தப்பட்டது. மேலும், திட்டமிடப்பட்ட சில நிகழ்ச்சிகள் நடத்தப்படவில்லை. மனித வளத் திட்டத்தின்படி எதிர்வரும் ஆண்டில் 12 மணிநேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல். |
| 6 | மொத்த ஊழியர்களையும் உள்ளடக்கி செயலாற்றுகை ஒப்பந்தங்களைத் தயாரித்து ஒப்பந்தம் செய்யப்படவில்லை. | தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 7 | மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் இயலளவு மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் நிறுவனத்தில் எந்த சிரேஷ்ட அதிகாரியும் நியமிக்கப்படவில்லை. | திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிறுவனத்தில் சிரேஷ்ட அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | நிர்வாகப் பிரிவின் பிரதிப் பதிவாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். |
| 8 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% க்கும் குறைவாகவே காணப்பட்டது. | தேவையான பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நியதிச் சட்டங்கள் மற்றும் சட்ட ரீதியான அறிவை விருத்தி செய்வதன் மூலம் சேவையின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதனால் அந்தச் சட்டங்கள் தொடர்பில் அறிவூட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 9 | நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியற்ற அல்லது பாதகமான நிலையில் காணப்பட்டது. | நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தை சாதகமான மட்டத்தில் பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயத்தை சாதகமான மட்டத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 10 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில் லை. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 11 | பொதுக் கணக்குகள் குழுவின் பரிந்துரைகள்/பணிப்புக்கள் செயற்படுத்தப்படவில்லை. | பொதுக் கணக்குகள் குழுவின் பரிந்துரைகள்/பணிப்புக்க ளை நடைமுறைப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்க கணக்குகள் குழுவின் பரிந்துரைகள் / கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 12 | அனைத்து அதிகாரிகளும் சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை. | அனைத்து அதிகாரிகளுக்கும் சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கைகளை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்தை வழங்காத உத்தியோகத்தர்களிடமிருந்து சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. |
| 13 | அதிகபட்ச சேவையை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை. | அதிகபட்ச சேவையை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் முறையாக இடமாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | திணைக்கள நியமனங்களைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாக தற்போது இடமாற்றச் சபை நடத்தப்பட்டுள்ளதோடு, வருடாந்த இடமாற்றச் செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. |

டப்.ஆர்.ஏ.என்.எஸ்.விஜயசிங்க
பதிவாளர் நாயகம்

W.R.A.N.S. Wijayasinghe
Registrar General
Registrar General's Department
No. 234/A3, "Denzil Kobbekaduwa Mawatha
Koswatta, Battaramulla

ஆர்.டீ.கே.வெலிவிடகே
பிரதம கணக்காளர்
பதிவாளர் நாயகத்திற்கு பதிலாக

R.T.K. Welivitage
Chief Accountant
Registrar General's Department
Battaramulla

## செயலாளரின் பரிந்துரை

பதிவாளர் நாயகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பதிவாளர் நாயகத்திற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**Pradeep Yasarathna**
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக் குழு மூலம் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவ மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்